செ.வெ. எண்: 806 நாள்: 31.12.2011

# கோ—ஆப்டெக்ஸின்
# பெங்களூரில் மல்லேஸ்வரம் பகுதியில்
# புதிய விற்பனை நிலையம் திறப்பு விழா

## பத்திரிக்கை செய்தி

——

தமிழ்நாட்டிலுள்ள பிரதம கைத்தறி சங்கங்களின் தாய்ச் சங்கமாக திகழும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் 1935 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்கவும், அவர்கள் உற்பத்தி செய்யும் துணி இரகங்களை இந்தியா முழுவதும் அமைந்துள்ள 200 க்கு மேற்பட்ட விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

கைத்தறி இரகங்களான சேலைகள், வேட்டிகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், துண்டுகள், லுங்கிகள் போன்ற துணி இரகங்கள்தான் கோ—ஆப்டெக்ஸில் கிடைக்கும் என்ற நிலையிலிருந்து வேகமாக மாறிவரும் நாகரீகத்தின் தேவைக்கேற்ற வகையில் புதுப்புது வடிவமைப்புகளில் வாடிக்கையாளர்களை கவரும் வகையில் துணி இரகங்களை அறிமுகம் செய்வதன் மூலமாக தொடர்ந்து வாடிக்கையாளர்களின் பேராதரவினைப் பெற்று தனிச் சிறப்புமிக்க நிறுவனமாக கோ—ஆப்டெக்ஸ் விளங்கி வருகிறது. இத்தகைய திட்டமிட்ட செயல்பாட்டின் காரணமாக இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமாக கோ—ஆப்டெக்ஸ் விளங்கி வருகிறது. கண்ணைக் கவரும் வண்ணங்களில் புத்தம் புது வடிவமைப்புகளில் பெங்களூரு வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப தரமிகு பட்டு மற்றும் அனைத்து பருத்தி இரகங்களை விற்பனை செய்ய இலக்கம் எண்.91, 5—வது குறுக்குத் தெரு, மல்லேஸ்வரம், பெங்களூரில் குளிர்சாதன வசதியுடன் நவீனமயமாக்கப்பட்ட புதிய விற்பனை நிலையம் துவக்கப்பட உள்ளது.

கோ–ஆப்டெக்ஸின் குளிர்சாதன வசதியுடன் நவீனமயமாக்கப்பட்ட இந்த விற்பனை நிலையத்தை தமிழக அரசின் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மருத்துவர் **எஸ்.சுந்தரராஜ்,** அவர்கள் 01.01.2012 அன்று மாலை 4.00 மணிக்கு திறந்துவைத்து முதல் விற்பனையை தொடங்கிவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். இவ்விழாவிற்கு தமிழக அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை அரசுச் செயலாளர், திரு **சி.முத்துக்குமாரசாமி,** இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் **திரு விஜய் பிங்களே,** இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புற செய்துள்ளார்கள்.

கோ–ஆப்டெக்ஸ் உலகத் தரம் வாய்ந்த தமிழக நெசவாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த இதுபோல் இன்னும்பல முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**